(**2025-26-**ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE** 25 UTL 2C2

**REG.NO:**

## என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி

## பருவ இறுதித் தேர்வுகள் : மே – 2026

இளநிலை பட்ட வகுப்புகள் — மதிப்பெண்கள் : 75

அரசு உதவி (கணிப்பொறியியல்/வணிகவியல் மட்டும் ) மற்றும் சுயநிதி (பி.ஏ.தமிழ் இலக்கியம் நீங்கலாக )

இரண்டாம் பருவம் — நேரம் : 3 மணி

### பகுதி–1

### தமிழ்த்தாள் - 2

### பகுதி–அ (10x1=10 மதிப்பெண்கள்)

**பின்வரும்அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத்** தேர்ந்தெடுத்து எழுதுக. **(K1)**

1. கலிங்கத்துப் பரணியின் ஆசிரியர் யார்?

   அ) ஜெயங்கொண்டார் ஆ) நம்பியாண்டார் நம்பி இ) புகழேந்தியார் ஈ) நாற்கவிராச நம்பி

2. "குணக்குன்றே, அருட்கடலே" என்று அபிராமியைப் பாடியவர் யார்?

   அ) குமரகுருபரர் ஆ) அருணகிரிநாதர் இ) அபிராமிப்பட்டர் ஈ) பவணந்தியார்

3. நரையின்றி முதுமை வராமலிருக்க எது காரணமெனப் பிசிராந்தையார் கூறுகிறார்?

   அ) மக்கள், மனைவி ஆ) அரசன் இ) சான்றோர் ஈ) அனைத்தும் சரி

4. கல்லூரி சென்றாள் என்ற தொடரில் மறைந்திருக்கும் உருபு எது?

   அ) கு ஆ) ஆல் இ) இல் ஈ) கண்

5. கீழ்க்காண்பவர்களுள் முதலாழ்வார் யார்?

   அ) திருமங்கையாழ்வார் ஆ) குலசேகராழ்வார் இ) பொய்கையாழ்வார் ஈ) ஆண்டாள்

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு சொற்களில் / வரிகளில் விடை தருக. (K2)

6. "சிலையால் மராமரமெய்த தேவனை"- யார் கூற்று?
7. பொருள் கூறுக: கிரந்த எழுத்து
8. 85 வைணவத் தலங்களைப் பாடியருளிய ஆழ்வார் யார்?
9. தொகாநிலைத்தொடர் எத்தனை வகைப்படும்?
10. பிள்ளைத்தமிழுக்குரிய பருவங்கள் எவை?

### பகுதி–ஆ (5 x 5 = 25 மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு** இரண்டு பக்க அளவில் வி டையளிக்கவும். (K3)

11. அ) சொக்கநாதப்பிள்ளையின் கவிச்சுவையைக் கூறுக.

    (அல்லது)

    ஆ) தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சியில் காணலாகும் குறத்தியின் வருகையையும் நாட்டுவளங் கூறுதலையும் எடுத்துரைக்க.

12. அ) மன்னனின் தன்மைகளாகப் புறநானூறு வெளிப்படுத்தும் கருத்துகளை வெளிப்படுத்துக.

    (அல்லது)

    ஆ) மங்கலச்சொல் என்றால் என்ன? விளக்குக.

13. இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

அ) "உலகை எலாம் கவிக்கின்ற ஒரு கவிகைச்
சயதுங்கன் மரபின் கீர்த்தி"

(அல்லது)

ஆ) "அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

14. அ) உம்மைத்தொகையைச் சான்றுடன் எழுதுக.

(அல்லது)

ஆ) தொகைநிலைத் தொடரின் வகைகளை விளக்குக.

15. அ) சுந்தரர் சைவநெறிக்கு ஆற்றிய பணிகளை உரைக்கவும்.

(அல்லது)

ஆ) பரணி இலக்கியங்களை இயம்புக.

## பகுதி–இ (5 x 8 = 40 மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு** கட்டுரை வடிவில் விடையளிக்கவும். (K4/K5)

16. அ) அம்பிகையைப் போற்றும் அபிராமிப்பட்டரின் பக்தியுணர்வை வெளிப்படுத்துக.

(அல்லது)

ஆ) பெரியாழ்வாரின் பக்தித்திறத்தை முதல் திருமொழி எவ்வகையில் எடுத்தியம்புகின்றது?

17. அ) சூளாமணிக் காப்பியத்தின் சிறப்புகளை ஆய்க.

(அல்லது)

ஆ) தமிழர்களின் பாரம்பரிய வழிபாட்டு முறைகளை விளக்கி எழுதுக.

18. அ) தஞ்சை வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சி கூறும் செய்திகளை ஆய்ந்துரைக்கவும்.

(அல்லது)

ஆ) பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் காட்டும் அணுவியல், மருத்துவம், அளவை முறைகள் குறித்துக் கட்டுரைக்கவும்.

19. அ) படைப்பாற்றல் திறனை வளர்க்கும் முறைகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) எழுதும் திறனால் பெறும் நன்மைகளை எடுத்தியம்புக.

20. அ) குடிநீர் வசதி வேண்டி மாநகராட்சி ஆணையாளருக்கு விண்ணப்பம் வரைக.

(அல்லது)

ஆ) நீ சென்று வந்த மேலைநாட்டுச் சுற்றுலா குறித்த மகிழ்வை நண்பனுக்குக் கடிதமாக எழுதுக.



********